
JAYANTHI PICTURES
PRIVATE LIMITED
ஜயந்தியின்
வாழ்க்கை
ஒப்பந்தம்
தயாரிப்பு — டைரக்ஷன்: K.V. ரெட்டி B.Sc.(HONS.)

# வாழ்க்கை ஒப்பந்தம்

## கதைச் சுருக்கம்

திவான்பகதூர் சேதுபதியார் சோழபுரத்தின் பெரிய மிராசு. அவருக்கு ருக்மணி என்ற ஒரே புத்திரி. பிரதாப் ஒரே புத்திரன். எம். ஏ. எல். எல். பி. மிலிட்ரி ஆபீசர். இருவருக்கும் தாயில்லாமையால் மிகவும் அன்புடன் நேசித்து வந்தார். ஒரு நாள் ருக்மணி தமிழ்த் திருநாளை மிகவும் விமரிசையாகக் கொண்டாடுகிருள். அன்றே தன் வீட்டுச் சமையல்காரன் ஓடிப் போனதால், சேதுபதி ஒரு சமையல் ஆளை அனுப்பச் சொல்லி மதருசிலிருக்கும் தன் குடும்ப சினேகிதனை சமயோசித சாரங்கத்திற்கு தந்தி கொடுக்கிருர்.

சாரங்கம் மதருசில் ஒரே காம்பவுண்டில் உள்ள இரண்டு வீட்டில், ஒன்ருன தன் சொந்த சிறிய வீட்டில் தன் மனைவி முத்துலக்ஷிமியுடன் வசித்து வருகிருர். அவருக்கு குழந்தைகளில்லை. ஆகையினுல் அனுதையான, கிருஷ்ணன் என்னும் அறிவுள்ள பையனை எம். ஏ வரையிலும் படிக்க வைத்தார். தம்பதிகள் இருவரும் யோசனை செய்து ஒரு கடிதத்துடன், கிருஷ்ணனை சோழபுரத்துக்கு அனுப்பித்தால் எந்த வகையிலாவது நன்மை ஏற்படுமென நினைத்து அனுப்புகிருர்.

குறத்தி ஒருவள் சேதுபதியார் வீட்டிற்கு வந்து ருக்மணிக்கு 15 நாட்களுக்குள் கல்யாணம் ஆகுமென்றும், வரன் தன்னைத் தேடி வரும் என்றும், சொல்லிப் போகிருள். சேதுபதியாரும் வேலைக்காரி சீதையும் இச் செய்தியைக் கேட்டு சந்தோஷமடைகிருர்கள்.

கிருஷ்ணன் சேதுபதியார் வீட்டிற்குத் தவறுதலான கடிதத்துடன் வந்து சேருகிருன். ருக்கு வுக்கு கிருஷ்ணனைப் பார்த்ததும் ஏற்பட்ட ஒரு நல்ல அபிப்பிராயம், சாரங்கம் அனுப்பித்தந்த கடிதத்தைப் பார்த்ததும், மாறி குழப்பத்தில் கொண்டு விடுகிறது. ஆனல் வேலைக்காரி சீதாவோ அவனை சமையல்காரனென ஊர்ஜிதம் செய்து, சமையல்

கட்டில் இறக்கி விடுகிருள். கிருஷ்ணன் அந்த வீட்டில் மாட்டியிருக்கும் பிரதாப் போட்டோவைக் கண்டு, இது தன்னுடைய சிநேகிதனுடைய வீடு எனத் தெரிந்து, ஒருவாறு சமையலுக்கும் ஒப்புக்கொள்கிருன்.

இப்படி இருக்க, சாரங்கம், கிருஷ்ணன் புறப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம், தன் தவறுதலால் சமையல்காரக் கடிதம், கிருஷ்ணனுக்குக் கொடுத்தனுப்பியதை உணர்ந்து, உண்மையான சமையல் ஆளுடன் சோழபுரத்திற்கு விரைந்து வந்து சேருகிருன். நடந்த விபரத்தையும் கிருஷ்ணனைப்பற்றியும் ருக்குவிடம் சொல்லி ஒருவாறு ருக்குவின் சம்மதத்தைப் பெறுகிருன். வெளியே போன சேதுபதியாரும் வர, பிரதாப்பும் ஊரிலிருந்து வர, யாவரும் சம்மதித்து கிருஷ்ணனுக்கு ருக்குவை திருமணம் செய்து கொடுக்கத் தீர்மானித்து விட்டார்கள். திருமணம் ஒரு தலைவரைக் கொண்டு அதிவிமரிசையாக நடக்கிறது. மணப் பந்தலில் தலைவர் தம்பதிகள் இருவருக்கும் பிரமாண இதழ்கள் கொடுத்து, அவர்களை அந்தப் பிரமாணங்களிலிருந்து தவறுவதில்லை என பிரதிஞ்ஞை வாங்கிக் கொள்கிருர் ...

மதருசிலுள்ள அலங்கார அழகு நிலையம் பிரைவேட் லிமிட்டெட்டின் மானேஜிங் டைரக்டர் நந்தா. மானேஜர் சாரங்கம். செலாமணி, பிரசாரமணி, இருவரும் குமஸ்தாக்கள். சாரங்கத்தினுடைய சிபார்சினல் கிருஷ்ணன் மேற்படி கம்பெனியில் செக்ரெட்டரியாக நியமிக்கப்பட்டார். முதலாளியின் புகழையும் பெற்ருர்.

நாட்கள் பல கடந்தன மூன்று குழந்தைகளுக்குத் தந்தை ஆனுர் கிருஷ்ணன். வீட்டிலும், ஆபீசிலும் வாழ்க்கை நிம்மதியாக இருந்தது. ஆனல் திடீரென்று ஆபீசில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. பி. ஏ. படித்த ஒரு நாகரீக இளம் யுவதி ராதா என்பவளை நந்தா டைப்பிஸ்டாக நியமித்தார். அவள் வந்த நாள் முதல், செலாமணியும், பிரசாரமணியும், குணத்திலும், உடை உடுப்பதிலும் மாறுதலடைந்து முடிவில் அவளைக் காதலிக்கும் கட்டம் வரையிலும் வந்து விட்டார்கள். கிருஷ்ணனின் முடுக்கான குணத்தைக் கண்டு ராதாவுக்கு பிடிக்காததால், அவனுக்கு எப்படியாவது பெண்களிடம் எப்படிப் பழகுவது என்ற பாடத்தைக் கற்றுக்கொடுக்க வைராக்யம் பூண்டாள்.

ருக்மணி மூன்று குழந்தைகளையும் கவனிப்பதிலேயே தன்னுடைய பொழுதை போக்குகிறாளே ஒழிய, கிருஷ்ணனின் உல்லாச வியவஹாரங்களுக்கு ஈடுபடவில்லை. மனக் கசப்படைந்த கிருஷ்ணன் மெள்ள ராதாவின் வலையில் விழுகிறான். தன் வீட்டிற்கு அவனை காப்பிக்கு வரவழைத்து, காப்பி கொடுக்கிறாள் ராதா. சிநேகம் முற்றுகிறது. அவ்வப்பொழுது கல்யாணத் தலைவர் பிரத்தியக்ஷமாகி காதல் விஷயத்தைக் குறித்து, பிரமாணத்திலிருந்து கிருஷ்ணன் தவறுவதையும் எச்சரிக்கிறார். இதை யாவும் கண்டு சந்தேகித்த சாரங்கம், முத்துலக்ஷிமியுடன் ஆலோசித்து, பிரதாபுக்கு அநாமதேயக் கடிதம் எழுதி வரவழைக்கிறார். பிரதாப் வந்து விஷயங்களை அறிந்து கொண்டு ராதாவிடம் பணம் கொடுத்து எப்படியாவது தன் மைத்துனரை அவள் வலையிலிருந்து தப்புவிக்கப் பார்க்கிறான்.

நந்தா தன்னுடைய கம்பெனியின் வெள்ளி விழாவுடன் அழகுப் போட்டி ஒன்று நடத்துகிறார். தமிழ் நாட்டு அழகி என்றும், தங்கப் பதக்கத்தை சிறந்த அழகிக்கு கொடுப்பதாகவும் தீர்மானிக்கிறார்கள். அதற்கு எஸ். பி. வி. ட்ராம் பிரதான ஜட்ஜ் ...

ராதா, கிருஷ்ணனுக்கு எப்படிப் பாடம் கற்பிக்கிறாள்? பிரதாப் தன் மைத்துனனை அவள் வலையிலிருந்து தப்புவிக்கும் முயற்சி என்ன ஆயிற்று? சாரங்கம், பிரதாப், ருக்கு, யாவரும் சேர்ந்து கிருஷ்ணன் தன் மனைவியையும், குழந்தைகளையும் நன்கு உணர என்ன நாடகம் ஆடுகிறார்கள்? ராதாவின் முடிவு என்ன? என்கிற எல்லா விவரங்களையும் வெள்ளித் திரையில் கண்டு ஆனந்தியுங்கள் ...

சுபம்.

## பாடல்கள்

### 1

பாடியவர்: P. லீலா & கோஷ்டி

ருக்மணி—கோஷ்டி கானம்

ஜெயமே நீ அருள் எங்கள் செந்தமிழ் தாயே
செல்வமே நின் சேவை மறவோமே தாயே (ஜெய)

காவேரி பாலாறு கரைபுரண்டோடவே
பாவலரும் நாவலரும் பாமாலை சூடவே
கன்னித்தமிழ் சாரதி கொஞ்சும் கலைவாரிதி
தென்னாட்டுத் திலகமே வாழ்க நீயம்மா (ஜெய)

மூவேந்தர் புகழ்ந்திடவே முத்தமிழும் விளங்கிடவே
பாவேந்தர் பணிந்திடவே பைந்தமிழின் கலையால்
வள்ளுவனை தொல்லுலகம் வாழ்த்திடவே பிறந்தாய்
வற்றாத கலைச் செல்வம் வாழ்க நீயம்மா (ஜெய)

வ. உ. சிதம்பரம் குமரனையும் ஈன்றாய்
வையமே புகழும் கட்டபொம்மனையும் தந்தாய்
வண்ணமலர் பதந்தேடி வணங்கி நின்றோமே
வானோங்கும் வளர் மதியே வாழ்க நீயம்மா (ஜெய)

### 2

பாடியவர்: T. V. ரெத்தினம்

குறத்தி பாட்டு

கொச்சிமலை குடகுமலை எங்களது நாடு — சாமி
எங்களது நாடு — அந்த
குமரேசன் குடி இருக்கும் நாடு எங்கள் நாடு
இந்த வீட்டு யஜமானன் ஜனக மஹாராஜன் — தம்பி
ஜனக மஹாராஜன்

இன்னும் கூட சொல்லப்போறு தசரத மஹாராஜன்
வந்தவளை புரிஞ்சிக்காமே பேசிடாதே தம்பி – நீ
ஏசிடாதே தம்பி – என் வாக்கு மேலே குடி இருந்து
துள்ளுருடா தம்பி – குறிசொல்லுருடா தம்பி

(வேறு மெட்டு)

பரிவான செல்வமே – பணக்காரச் செல்வமே – உன்னை
மலையாள பகவதி – மனசார பாக்குரு
அறிவான பொண்ணுக்கு – குறிசொல்லச் சொல்லுரு
அதுக்கேற்ற தட்சணையும் இப்பவே கேக்குரு

(வேறு மெட்டு)

ஏழுமலை ஆண்டவனே சரணமய்யா
எதிர்வட்டி கேட்பவனே சரணமய்யா
தென்பழனி ஆண்டவனே சரணமய்யா – உந்தன்
சித்தமிறங்கி வரணும் சரணமய்யா
தாயே சரணம் – நீயே வரணும்
அம்மா சரணம் – ஆயி வரணும்
கஞ்சி நகர் காமாக்ஷி – காசி விசாலாக்ஷி
தஞ்சை நகர் பெரியாச்சி – தென் மதுரை மீனுக்ஷி
சரணம் சரணம் தாயே – ஓடி
வரணும் வரணும் நீயே. (கேளம்மே கேளு)

(வேறு மெட்டு)

பெற்ற தாயும் உன்னை விட்டுப் பிரிந்து –
சொர்க்கலோகம் போறு
பேதையான உன் வாழ்வு பொங்க – குல
தெய்வம் போலுமாறு
நித்தம் உந்தன் கல்யாண நினைவினுல்
நிலையும் மாறலாறு
நீதி தேவி உன் வாழ்வை தேடி
நல்ல சேதி சொல்லச்சொன்னு ஒரு
சேதி சொல்லச்சொன்னு.

(வேறு மெட்டு)

முடியாது முடியாது முடிஞ்சிருக்காது
முடிவான வேளையும் வந்ததிப்போது
வருஷக்கணக்காகுமென வாடியே நிக்குறே
வர்ர பதினைஞ்சுக்குள் முடிவாகும் சாமி.

(வேறு மெட்டு)

ஷோக்கு மாப்பிள்ளையே துள்ளாதிங்க — ஒங்க
சொக்குபொடி வேலையெல்லாம் செல்லா துங்க
பாக்கு வெத்தலையும் மாத்துவாங்க — வர்ர
பத்தாம் நாள் பந்தலுமே போடுவாங்க
ரஸமான கட்டத்திலே ராக்ஷஸன் போல வந்தா
ராமக்கா பொம்மக்கா சோதனை செய்வா
வடக்கு பாத்ததில்லை — நீ வாழப்போகும் எல்லை
நடக்கற மாப்பிள்ளை — வர்ரான் நாளை காலைக்குள்ளே
அவனை.

கண்டாலே சொக்கி விடுவே — அவனும் உன்
கண்ணாலே சொக்கி விடுவான்.

3

பாடியவர்: கண்டசாலா

கிருஷ்ணன்: பாட்டு

(தொகையரு)

நானல்ல என்பதும் முறையா — இந்தத்
தேன்மலர் — உனதே இல்லையா — தேவி!

(பாட்டு: எடுப்பு)

கனிவுடன் பாராயோ எந்தன்
காணிக்கை பெறுவாயோ — தேவி (கனி)
மணமிகு மலரை மனதினில் தூவி
மாயாஜாலமும் ஏனோ (கனி)

இனிதானத் தென்றல் ஊஞ்சலிலே – என்னை
இன்பமாகத் தாலாட்டி
கனவினில் தோன்றி கண்ணாலே பேசி
கணமதில் மறைந்ததும் ஞாயமா (கனி)

கார்முகில் வானில் நீந்திடும் நிலவே
கலையெனும் வலைதனை வீசி
கனிந்தே ஒரு சொல் பேசாதென்னையே
கவர்ந்தே சென்றதும் ஞாயமா (கனி)

4

பாடியவர்: P. லீலா

ருக்மணி: பாட்டு

பிருந்தாவென வெண்ணிலாவே
பேதம் இன்னும் ஏனோ ?
சுந்தரக்கலை நீயே
சுகம் தந்திடும் சிலை நானே ! (பிரு)

கண்ணிலாடும் வெண்ணிலாவும் புன்னகையால் மலர
கலை உலாவும் ராஸ லீலை காணமனமுங்குளிர
கண்ணா உனதழகினாலே எனையே மறந்தேனே (பிரு)

காலினிலே சதங்கை நாதம் கலகலவென குலுங்க
கவலைதீர குழலோசையின் இனியகானம் முழங்க
கனிவான என்மனமே நிலை இழந்தேநின்றேனே (பிரு)

5

பாடியவர்: கண்டசாலா & P. லீலா

கிருஷ்ணன் – ருக்மணி

கிருஷ்ணன்: இதயவானில் உதயமான
நிலவே – வா வெண்ணிலாவே வா

ருக்மணி: இதயவானில் உதயமான
நிலவே வா வெண்ணிலாவே வா.

கிருஷ்ணன் : அமுதக் கலையே அள்ளி வீசும்
குமுத மலரும் தேடுதே
அழகு தாரகை மாலை சூட
ஆவலுடனே நாடுதே
வாழ்வினில் ஒரு நாள் — அதுவே திருநாள்
வாராயோ அன்பே

இருவரும் : இதயவானில் உதயமான
நிலவே வா — வெண்ணிலவே வா.

ருக்மணி : மலரைத் தேடி மலயமாருதம்
மகிழ்ந்து அன்பை வீசுதே
மாசில்லாத உள்ளம் ரெண்டும்
மனது குளிர பேசுதே
மதுநிலை மாரு — புதுநிலை பாராய்
மயங்காதே வாராய்

இருவரும் : இதயவானில் உதயமான
நிலவே வா — வெண்ணிலவே வா !!

6

பாடியவர் : கண்டசாலா & P. லீலா

கிருஷ்ணன் — ருக்மணி

கிருஷ்ணன் : நீதானே லோகமும் — நீதானே ஸ்வர்க்கமும்
இதுதான் ஜீவதமே இகமேல் ஆனந்தமே
(நீதானே)

(தொகையரு)

என் உயிரும் நீயன்றோ — உன் உள்ளமும்
நானன்றோ
காதல் கடலிலே — அன்பெனும் படகிலே
இல்லறக்கரை சேர்ந்து — அன்பே
இன்பமே — எந்நாளும் காண்போமே
(நீதானே)

(தொகையறு)

கண்ணைத் திறந்தாலும் —கண்ணை மூடினாலும்
ஆபீசுலே பைலின் அட்டைமேலும்
கை குட்டைமேலும் — அன்பே
உன் ரூபமே — உன்மேல் தாபமே

கிருஷ்ணன் : நீதானே என் லோகமும்.

ருக்மணி : நீதானே என் ஸ்வர்க்கமும்.

7

பாடியவர் : P. லீலா & கோஷ்டி

ருக்மணி — கோஷ்டி : தாலாட்டு பாட்டு

ஆராரோ — ஆராரோ — அன்பே கண்வளராய்
அணையாத தீபமே கண்ணே கண்வளராய் (ஆரா)

பொன்னான செல்வமே புன்னகை வீச
பூவாத கமலமே பொன் இதழ் பேச
எந்நாளும் ஸ்ரீலெக்ஷிமி இன்ப தாலாட்ட (ஆரா)

தாதாவின் ஆஸ்திக்கு தளபதி நீயே
மாமாவின் கீர்த்திக்கு கோமானும் நீயே
மங்காத வாழ்விற்கு மஹாராஜன் நீயே (ஆரா)

தவழ்ந்தோடி விளையாடும் தங்கமே வாராய்
சல்லாப நிலவே நீ — ஒளிவீச வாராய்
தாய் தந்தைக் கலிதீர்த்த தவமே என் பாப்பா (ஆரா)

8

பாடியவர் : ஜிக்கி (கிருஷ்ணவேணி)

பூக்காரி பாட்டு

போனா வராது இது பொழுதுபோனா கிடைக்காது
பூமாலை என்னைப்போலே தொடுக்க யாரும் முடியாது
(போனா)

ஆனுன மைனரையும் அசரவைக்கும் பாத்துகுங்க
சீனு சிங்கப்பூரெல்லாம் பார்சலிலே பறக்குதுங்க
ஏ மச்சான் — ஏ மாமா
அச்சாரம் இல்லாமே ஏன் அப்படி இப்படி பாக்கறீங்க
(போனு)

பாட்டி கிழவி தலையில் வச்சா பழைய வயசு திரும்பிடுங்க
பழுத்துப்போன தாதாவுக்கும் பலத்தை கொடுத்து
மயக்கிடுங்க
பஜாரு விலையைக்கேட்டு பாதிகொடுத்தா போதுமுங்க
ஏ மாமி — ஏ சாமி
பல்லே கில்லே காட்டாமலே பர்சை எடுத்து நீட்டிடுங்க
(போனு)

குத்தாலத்துலே வச்சுகிட்டா இது கும்பகோணத்துலே
குமாய்க்கும்
பெத்தாபுரத்தில் வச்சுகிட்டா இது பேராளத்துலே
ஜமாய்க்கும்
சைனு பஜாருக்கெல்லாம செலாமணி இதுதாங்க
சினிமாவின் ஸ்டாருக்கெல்லாம் வாடிக்கையும் நான்தாங்க
ஏ ராஜா — பார் ரோஜா
மெத்தையிலே விசிறிவிட்டா — அத்தர்மணம் வீசிடுங்க
(போனு)

9

பாடியவர்: சுசீலா

ராதா — டான்ஸ் பாட்டு

கிருஷ்ணு — உனக்கும் பயந்தானு ! கிருஷ்ணு
என்னையே மறந்தே அழைத்ததினுலே
ஏழையை நெருங்காதே கிருஷ்ணு
ஏளனம் புரியாதே (என்னயே)

சிரமதில் மகுடமும் — சிறந்ததோர் திலகமும்
கரமதில் கங்கணமும்
சுந்தர ரூபமே உந்தனைக் கவர்ந்திட
சிந்தையும் மாறிடுதே கிருஷ்ணு
வந்தென்னை நெருங்காதே (என்னயே)

மோகனப் புன்னகை பார்வையினலே
மோகமும் மீறிடுதே
முரளீ கானத்தின் இன்னிசையாலே
பரவசமாகிடுதே கிருஷ்ணு
அருகினில் நெருங்காதே (எனையே)

10

பாடியவர்: கண்டசாலா – சுசீலா

கிருஷ்ணன் – ராதா

கிருஷ்ணன்: வாராய் ஆருயிர் ராதா – என்
வாழ்வின் செல்வம் வேறுண்டோ – உயர்
வைரமாளிகை நீயன்றோ (வாராய்)

ராதா: போதும் போதும் கிருஷ்ணு – நீ
பொல்லாத மாயன் அல்லவோ – இங்கு
நில்லாமல் அங்கு செல்லுவீர் (போதும்)

கிருஷ்ணன்: கோபிமார் உன் அழகில்லை பாராய்
கோரினேன் என் கண்ணே நீ வாராய்
கோபமேனே குறையே தீராய்
தாபமீறுதே இன்பமே தாராய் (வாராய்)

ராதா: இதயம் ஒருநிலை இல்லாததேனே
யாரைக்கண்டும் இதே நிலைதானே
இனியும் நானே உன்னை நம்புவேனே
ஏய்க்கும் வலைதனில் ஏமாறுவேனே

கிருஷ்ணன்: வாராய் ஆருயிர் ராதா – என்
வாழ்வின் செல்வம் வேறுண்டோ – உயர்
வைரமாளிகை நீயன்றோ

ராதா: போதும் போதும் கிருஷ்ணு – நீ
பொல்லாத மாயன் அல்லவோ – இங்கு
நில்லாமல் அங்கு செல்லுவீர்

பாடியவர்: திருச்சி லோகநாதன்

சமயோசித சாரங்கம் — விருத்தம்

சாரங்கம்: ரம்பையும் ஊர்வசியும் மேனகை திலோத்த
மையின்
ரஸிகனும் நானல்லவோ
ராவும் பகலும் உந்தன் ஆவலால் ஏங்கிடும்
ராவணன் நானல்லவோ
அம்புவியில் யாவரும் அடிபணிந்தேற்றிடும்
அதிவீரன் நானல்லவோ
அன்போடு காதலனை பண்போடு இனிமேலும்
ஆட்கொள்ள மனமில்லையோ

முத்து: ஆ ஆ! என்ன இது!

ச. சா: எட்டி நில் மண்டோதரி
சக்களத்தியைக் கண்டு தயங்கிடாதே—அவளே
உன் தாள் பணிந்திடச் செய்வேன் மயங்கிடாதே
கண்ணே! திக்கெல்லாம் போற்ற — உனை சிர
மீதில் ஏற்றுவேன் திகட்டாத கனியே உன்
பகட்டான பார்வையால் மிரட்டாதே
மோகனாங்கி!

## கொலம்பியா ரிக்கார்டுகளில்

ஜெயந்தியின்

# "வாழ்க்கை ஒப்பந்தம்"

டாக்கிப்பாட்டுகளைக் கேளுங்கள்

| | |
|---|---|
| G. E. 32394 | ஜெயமே நீ அருள்<br>ஆராரோ – ஆராரோ |
| G. E. 32395 | என்னையே மறந்தே<br>வாராய் ஆருயிர் ராதா |
| G. E. 32396 | பிருந்தாவென வெண்ணிலாவே<br>நானல்ல என்பதும் முறையா |
| G. E. 32397 | நீதானே லோகமும<br>இதயவானில் உதயமான |
| G. E. 32400 | கொச்சிமலை குடகுமலை<br>போனா வராது |

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்-2.


Chamundi Art Printers, Madras-7